**கங்க இஹல கோரளே பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 25 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கங்க இஹல கோரளே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்குகளின் மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 32,180,308 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 4,069,055 ஆக காணப்பட்டது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 48,802,859 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் ரூபா 42,642,308 இற்கான செலவுகள் கடன் கொடுத்தோர் ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,954,819 ஆகும். 2014 ஜுலை 30 திகதியில் உள்ளவாறு மேலும் 01 வருட காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,874,819 ஆகும்.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,449,862 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 413,651 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 7,036,211 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு நிதியான நிதி மீளாய்வு

------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டிற்கான பற்றாக் குறையுடன் ஒப்பிடும் போது, ரூபா 7,036,211 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டதுடன், அதற்காக 2013 ஆண்டின் போது மூலதன சொத்துக்கள் திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவு நூற்றிற்கு 74 இனால் குறைவடைதல் அடிப்படை காரணமாக அமைந்திருந்தது.

2.3 தொழிற்பாடு மூலதன முகாமைத்துவம்

------------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்கள் காணப்படும் விகிதாசாரம் 1.4 : 1 ஆக காணப்பட்டதுடன் அவை உச்ச மட்டத்தில் காணப்படவில்லை. ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றிற்கு 65 உம் நிலுவை வருமானங்கள் அடங்கியிருந்ததுடன். அத்துடன் நடைமுறை பொறுப்புக்களில் நூற்றிற்கு 85 உம் நிர்மாண வேலை கடன்கொடுத்ததோர் அடங்கியிருந்தது.

2.4 வருமான நிருவாகம்

-----------------------------

(அ) வீத வரி

-------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 1,883,602 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், அத்தொகையில் அறவிடப்பட்டிருந்த ரூபா 465,791 ஆகிய நூற்றிற்கு 25 இற்கான எண்ணிக்கை மாத்திரமே. ரூபா 827,133 இற்காக ஆண்டிற்கான பில் போடப்பட்டவைகளில் ஆண்டின் போது ரூபா 294,883 ஆகிய நூற்றிற்கு 35 மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடை வாடகை

---------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை வருமானம ரூபா 782,160 ஆகும்.

(இ) நீர் கட்டணம்

--------------------

(a) நீர் செயற்திட்டம் செயலிழந்தமையால், 10 பகுதிகளுக்கான நீர் பில் போடுதல் இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன், அப் பகுதிகளில் நிலுவையாக இருந்த நீர்க் கட்டணத்தின் பெறுமதி ரூபா 85,464 ஆக காணப்பட்டது.

(b) சபைக்கு சொந்தமான 05 செயற்திட்டங்களின் 02 மாத்திரம் செயற்படும் நிலைமையில் காணப்பட்டதுடன், இரண்டு செயற்திட்டங்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 71,032 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

(ஈ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

-----------------------------------------

1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 இலக்கங்கள் கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்டிருந்த 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்டிருந்த விதிகளின் பிரகாரம் 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும் என சுட்டிக்காட்டியிருந்த போதும், சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளாமல், வியாபாரங்கள் நடத்தப்பட்டுள்ள 14 சந்தர்ப்பங்கள் தொடர்பாக சபைக்கு ரூபா 56,000 தொகை ஒன்றினை இழப்பதற்கு நேரிட்டுள்ளது.

(உ) முச்சக்கர வண்டிக் கட்டணம்

--------------------------------------------

மீளாய்வாண்டின் போது முச்சக்கர வண்டி தரிப்பிடத்துக்கான மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா 200,000 தொகையில் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது ரூபா 96,675 தொகை மாத்திரம் ஆகும்.

(ஊ) நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

--------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 642,664 வும் மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 11,629,920 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

-------------------------------------------

2010 ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 384,096 தொகையொன்று செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த உயிர் வாயு அலகு சுமார் ஒரு மாதம் அளவில் செயற்படும் நிலையில் காணப்பட்டதுடன் பின்னர், செயற்லிழந்து காணப்பட்டது எனினும் 2014 ஆண்டு வரை செயற்படு நிலைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் ரூபா 200,000

தொகை ஒன்று திருத்த வேலைக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதும் அத் தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

3.2 ஒப்பந்த நிருவாகம்

---------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) எத்கால சிங்கபுர கம்மெத பாதை அபிவிருத்தி செய்தல்

------------------------------------------------------------------------------------------

வேலை விடய இலக்க 04 இன் கீழ் G 20(1:2:4(3/4") கொங்கிரீட் கலவையின் மூலம் கொங்கிரீட் பக்கச் சுவர் 10 அங்குல கனத்தில் நிர்மாணிக்க வேண்டியிருந்தது எனினும் 04 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனைகளின் போது கனம் முறையே 6",6",5 1/2" மற்றும் 6 1/2" அங்குலங்களாக காணப்பட்டது.

(ஆ) லக்ஷ பிஹில்ல கட்டம் 1 அபிவிருத்தி செய்தல்

----------------------------------------------------------------------------

வேலை விடயம் இலக்கம் 04 இன் கீழ் G 20(1:2:4(3/4") கொங்கிரீட் கலவையின் மூலம் கொங்கிரீட் பக்கச் சுவர் 10" கனத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டும். எனினும், 04 சந்தர்ப்பங்களில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனைகளின் போது கனம் 7 ½", 8 ½", 7" மற்றும் 6" ஆகிய அளவுகளில் காணப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மை மற்றும் நல்லாட்சி

---------------------------------------------------------------------------

4.1 கொள்வனவு திட்டம்

------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

-------------------------------------------------------------------------

சபையில் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

---------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவிளான அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு மற்றும் நிதிக் கூற்றுக்களில் காணப்படும் பெறுமதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது, 06 செலவு விடயங்களில் நூற்றிற்கு 10 முதல் நூற்றிற்கு 58 வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிருவாகம்